
அறிந்து கொள்ளுங்கள்

# உங்கள் உரிமை என்ன? போலிசாரின் உரிமை என்ன?




## போலிசை சந்திக்கும்போது உங்களுக்கு தெரியவேண்டியவை

# மனித உரிமை என்றால் என்ன?



**01**

ஒவ்வொரு
மனிதருக்குமான
உரிமை

**02**

மனிதர்
மரியாதையுடன்
வாழ அடித்தளமாக
அமைவது

**03**

மனித உரிமை என்பது உலகளாவிய அளவில் எப்பொழுதும் இனம், மதம், பாலினம், மொழி, மக்கள், அரசியல் அமைப்பு என்ற பிரிவினையில்லாமல் அனைவருக்கும் சமமானது

**04**

இந்த உரிமைகள்
மற்றவர்களின்
உரிமைக்கு தடையாக
இருக்காமல்
செயல்படுத்தப்பட
வேண்டும்

**05**

அனைவருக்கும்
அவரவர் உரிமைகள்
கிடைப்பதை உறுதி
செய்வது அரசாங்கத்தின்
கடமையாகும்

**06**

உரிமை பறிக்கப்படும் பொழுது அதை புகார் செய்வது ஒவ்வொருமனிதரின் உரிமையாகும் மற்றும் கடமையாகும்

# காவல்துறையினர் அலைபேசியின் மூலம் தொடர்ப்பு கொள்ளும் பொது

நீங்கள் காவல் நிலையத்திற்கு வரும்படி அலைபேசியின் மூலம் அழைக்கப்பட்டால், நீங்கள் செய்யவேண்டியது :

- அதிகாரியின் பெயரையும் மற்றும் அவர் பணிபுரியும் இடத்தையும் கேட்க வேண்டும்
- அழைப்பதற்கான காரணமும் மற்றும் தங்கள் மேல் விசாரணை நடக்கின்றதா என்பதையும் கேட்க வேண்டும்
- உங்களுக்கு தகுந்த நேரத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்

- காவல்துறை அதிகாரியிடம் 111 குறிப்பு அறிக்கையை கொடுக்கும்படி கேட்க வேண்டும், 111 குறிப்பு அறிக்கை வழங்கப்பட்டால் குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் காவல் நிலையத்தில் தங்களின் வருகை கட்டாயமானது

- காவல்நிலையத்திற்கு தனிமையாக செல்வதை தவிர்க்கவும், வழக்கறிஞரை தங்களுடன் வரும்படி கேட்கவும். வழக்கறிஞர் இல்லையென்றால் குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர்களிடம் காவல்நிலையத்திற்குச் செல்கிறீர்கள் என்பதை தெரிவிக்க வேண்டும்



# காவல்துறை அதிகாரியால் நிறுத்தப்படும்பொழுது



- தனிமையில் இருந்தால் கூட்டமான மற்றும் வெளிச்சமான இடத்திற்கு செல்லவும்
- மற்றவர்களுக்கு கேட்கும்படி சத்தமாக, அதேவேளை வாக்குவாதம் இல்லாமல் பேச வேண்டும்

# காவல்துறையினர் குடியிருப்பு இடத்தில் வந்து சந்திக்கும்போது

- வந்திருக்கும் காவல்துறை அதிகாரியை அடையாளம் காண்பதற்கு முன்பும் அவர் வந்திருக்கும் நோக்கத்தை அறிவதற்கு முன்பும் கதவை திறக்க வேண்டாம்

- குடும்ப உறுப்பினரையோ / நண்பரையோ / வழக்கறிஞரையோ தொடர்புகொண்டு தகவலை கூற வேண்டும்



# கவனத்திற்கு!!

## இந்த இரண்டு சூழலிலும் நீங்கள் காவல்துறை அதிகாரியின் அடையாள அட்டையை பற்றி கேட்க வேண்டும்

- பெயர் மற்றும் காவல்துறை அதிகாரியின் அடையாள அட்டையில் காணப்படும் எண்
- காவல்துறையின் வாகனம், மோட்டார்சைக்கிள் அல்லது மற்ற காவல் வாகனத்தின் பதிவு எண்




# காவல்துறை அடையாள அட்டை வகை

**நீலம்** : இன்ஸ்பெக்டர் அல்லது அதற்கு மேல் நிலையில் உள்ளவர்

**மஞ்சள்** : இன்ஸ்பெக்டர் பதவிக்கு கீழ் உள்ளவர், குறிப்பிட்ட அளவிலான அதிகாரம் உடையவர்

**வெள்ளை** : இருப்புக்காவலர்

**சிவப்பு** : பணி நீக்கம் செய்யப்பட்ட / பணி நிறுத்தம் செய்யப்பட்ட காவல் அதிகாரி. அவரின் கோரிக்கையை நிறைவு செய்யும் அவசியம் இல்லை.



# காவல் அதிகாரியால் நிறுத்தப்பட்டு கேள்விகேட்கப்பட்டால்

- பெயர், அடையாள அட்டை எண் மற்றும் முகவரி மட்டுமே வழங்க வேண்டும் (அடையாள அட்டையில் உள்ளபடி)
- மற்ற கேள்விகள் கேட்கப்பட்டால், இவ்வாறு கேட்கலாம்:



# இவை நிகழ்ந்தால் நீங்கள் கைது அல்லது தடுத்துவைக்கப் பட்டுள்ளீர்கள்

- காவல்துறை அதிகாரி “உங்களை  கைது செய்து உள்ளோம்" என்று கூறினால்
- அவ்விடத்தில் இருந்து செல்வதற்கு காவல்துறை அதிகாரி அனுமதி வழங்க மறுத்தால்
- கையில் விலங்கு மாட்டினால்
- அடையாள அட்டை தங்களிடமிருந்து அபகரிக்கப்பட்டால்

உங்களை தடுத்துவைக்கவில்லை என்றால், நீங்கள் அந்த இடத்தில் இருந்து செல்லலாம். மற்றும், அதிகாரியின் கட்டளைக்கு இணங்க காவல் நிலையத்திற்கோ அல்ல மற்ற இடத்திற்கோ செல்ல மறுக்கலாம்



# காவல்துறை அதிகாரி நிறுத்தும் போது

நீங்கள் கட்டாயம் கேட்க வேண்டியவை




காவல் அதிகாரி தங்களை தடுத்து நிறுத்துவதற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும்,மேலும் நீங்கள் மௌனமாக இருக்க உங்களுக்கு உரிமை உள்ளது.




- உங்களுடைய குடும்பம், வழக்குறிஞர் அல்லது நண்பர்களை தொடர்பு கொள்ள உரிமை உள்ளது
- உங்களை 24 மணி நேரம் மட்டுமே தடுத்து வைக்க முடியும் (மேலும் காவலில் வைக்க நீதிமன்றத்தின் அனுமதி வேண்டும்.)
- கைதுசெய்யப்படுவொரின் உரிமைகள் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 28A- இன் கீழ் பாதுகாக்கப்படுகிறது

# காவல்துறையின் விசரணையின் போது

காவல்துறையின் விசாரணையின்போது 112 அதிகாரப்பூர்வ வாக்குமூலஅறிக்கையை வழங்கும்படி கூறுவர்

ஒருவேளை அதிகாரி கேட்கப்படும் கேள்விகள் 112 அறிக்கையில் சேர்க்கப்படுமா என்ற சந்தேகம் எழுந்தால், இவ்வாறு கேட்கலாம்

இவை 112 அறிக்கையில் அடங்குமா?




**கவனத்தில் கொள்ளவும்!!!**

- விசாரணை அதிகாரியால் கேட்கப்படும் அனைத்து கேள்விகளையும் புரிந்து கொள்ள வேண்டும்
- விசாரணையின்போது பயன்படுத்தப்படும் மொழி புரியாவிட்டால் மொழிபெயர்ப்பாளர் உதவி தேவை என்று கேட்கவும்

ஆமாம் என்றால், பதில் கூறலாம் அல்லது பதில் கூற மறுக்கலாம்

நினைவில் கொள்ளுங்கள் 112 அறிக்கை விசாரணையின்போது மௌனமாக இருப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

நீங்கள் உங்கள் பெயர், அடையாள அட்டை எண், முகவரி ஆகியவற்றை கூறினால் போதுமானது




* நீங்கள் 112 அறிக்கை விசாரணையின்போது உங்களுடைய வழக்கறிஞரை அழைத்துச்செல்ல உரிமை உள்ளது

- 112 அறிக்கையை கையொப்பமிடுவதற்கு முன் நீங்கள் அளித்த பதில்கள் அனைத்தும் சரியாக உள்ளதா என்று சரி பார்க்கவும்.
- 112 அறிக்கையில் கையொப்பமிடுவதற்கும் முன் அதில் மாற்றம் செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது

# உடல் பரிசோதனை

கைது செய்யப்பட்டாலும் அல்லது கைதாகாத ற சூழலிலோ உடல் பரிசோதனை செய்ய இயலும்.



# நினைவுக்கு!

## கைது செய்யாமல் உடல் பரிசோதனை நடத்தினால்

- இன்ஸ்பெக்டர் அல்லது அதற்குமேல் பதவியில் உள்ள அதிகாரி இருந்தால் மட்டுமே நடத்த முடியும்

- காவல்துறை அதிகாரியை உங்கள் கால்சட்டை பையில் கைவிட அனுமதிக்காதீர்கள்



உடையின் உள்ளே உள்ள பொருட்களை ஒவ்வொன்றாக அதன் பெயரை கூறி வெளியே எடுக்கவும்






கால் சட்டைப்பை காலியாக உள்ளதையும் அதில் தடை செய்யப்பட்ட பொருள் எதுவுமில்லை என்பதைக் காட்டவும்

# தடுத்து வைக்கப்பட்ட போது உடல் பரிசோதனை நடத்தினால்

- உங்களுடன் வழக்கறிஞர் இருப்பதை உறுதிசெய்யவும்
- உடல் பரிசோதனை மறைவான இடத்தில் நடத்த வேண்டும்
- அந்தரங்க பாகங்களை தொடக்கூடாது
- பெண்களை ஒரு பெண் அதிகாரி மட்டுமே பரிசோதனை செய்ய முடியும்
- காவல்துறை அதிகாரி உங்கள் சட்டையை கழற்ற எந்த சட்டமும் அனுமதிக்கவில்லை




# தடுப்பு காவல் ஆணை

காவல் அதிகாரி 24 மணி நேரத்திற்கு மேல் காவல் தடுப்பில் வைக்க வேண்டுமென்றால், அவர் மஜிஸ்திரேட்டின் ஆணையைப் பெற வேண்டும்



| குற்றம் நிரூபிக்கப்பட்டால் கொடுக்கப்படும் தண்டனை | முதல் முறை காவலில் வைக்க | இரண்டாம் முறை காவலில் வைக்க |
|---|---|---|
| 14 ஆண்டுகளுக்கு குறைவாக | அதிகபட்சமாக 4 நாட்கள் | அதிகபட்சமாக 3 நாட்கள் |
| 14 ஆண்டுகளுக்கு அதிகமான | அதிகபட்சமாக 7 நாட்கள் | அதிகபட்சமாக 7 நாட்கள் |

- வழக்கறிஞர் உங்களுடன் இருப்பதை உறுதி செய்யவும். அல்லது அந்த சமயத்தில் பணிபுரியும் **YBGK**யின் சட்ட உதவியை கேட்பதற்கு உரிமை உள்ளது
- தங்களை வற்புறுத்தினாலோ/ கட்டாயப்படுத்தி வாக்குமூலம் கொடுக்க சொன்னாலும்/ உடல் நலம் சரி இல்லாமல் மருத்துவ உதவி தேவைப்பட்டாலோ/ காவலில் உள்ளபோது உணவு மற்றும் நீர் வழங்க மறுத்தாலோ, அவற்றை நீதிபதியிடம் கூறவும்



# கைபிடிப்பு ஆணையின் முடிவிற்கு பிறகு என்ன நடக்கும்?

**01** அல்லது **02**

**01**

போலீஸ் /வாக்கு உத்தரவாதம் மூலமோ விடுவிக்கப்படுவர்.



இந்த உத்தரவாதத்திற்கு எந்த ஒரு கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை என்பதை நினைவில் கொள்ளவும்

**02**

நீதிமன்றத்தில் குற்றம் சாற்றப்பட்டால்




நீங்கள் குற்றத்தை ஏற்கவோ அல்லது மறுக்கவோ தேர்வு செய்யலாம்

## குற்றத்தை ஏற்க மறுத்தால்

இவற்றை தேட வேண்டும்:

உத்தரவாதத்திற்கு (ஜாமீன்) ஒரு நபர்

உத்தரவாதம் வாங்குவதற்கான கட்டணம் (மொத்த கட்டணம் குற்றத்தை பொருத்துள்ளது)





* நீதிமன்றத்தின் விருப்பப்படி உத்தரவாத நிபந்தனைகள் இருக்கும்

# காவல் தடுப்பில் இருக்கும்போது அடிக்கப்பட்டால் அல்லது மிரட்டப்பட்டால்



நீங்கள் செய்ய வேண்டியவை:

- குடும்ப உறுப்பினர் அல்லது வழக்கறிஞரை காவல்துறையிடம் புகார் செய்யும்படி கூற வேண்டும்;

அல்லது

- நீதிபதியிடம் கூற வேண்டும்

அல்லது

- விடுவிக்கப்பட்ட பிறகு காவல் துறை தரநிலைகள் கண்காணிக்கும் துறையிடம் **(JIPS)** புகார் செய்ய வேண்டும்;

அல்லது

- அமலாக்க முகமை நேர்மை ஆணையம் **(EAIC)** மற்றும் மலேசிய மனித உரிமை ஆணையம் **(SUAHAKAM)**






**Suara Rakyat Malaysia (SUARAM)**

B-G-15, 8 Avenue Business Centre, Jalan
Sungai Jernih 8/1, Petaling Jaya, 46050
Petaling Jaya, Selangor

- 03- 7954 5724
- 03- 7954 5725
- www.suaram.net
- suaram@suaram.net
- Suara Rakyat Malaysia (SUARAM)

---

**Suruhanjaya Hak Asasi Manusia Malaysia (SUHAKAM)**

11th Floor, Menara TH Perdana, Jalan Sultan Ismail, 50250
Kuala Lumpur

- 603 – 261 25600
- 603 –261 25620
- www.suhakam.org.my
- humanrights@suhakam.org.my




**Pusat Bantuan Guaman Majlis Peguam Kuala Lumpur**

No. 2, Lebuh Pasar Besar,
50050 Kuala Lumpur.

03-2691 1121
03-2692 1122
www.kllac.com

**Jawatankuasa Hak Asasi Manusia Badan Peguam Malaysia**

13, 15, 17, Lebuh Pasar Besar, 50050 Kuala Lumpur

03 – 2050 2050
03 – 2026 1313

**Suruhanjaya Bebas Tatakelakuan Polis (IPCC)**

Aras 7, Setia Perkasa 7, Kompleks Setia Perkasa
Pusat Pentadbiran Kerajaan Persekutuan
62546 Putrajaya

03 8888 6618/ 2184 /6509
aduan.ipcc@moha.gov.my
moha.gov.my

suara
rakyat
malaysia
SUARAM
*working for human rights*

Penerbit:

**Suara Inisiatif Sdn. Bhd.**
working for human rights

suararakyatmalaysia

suaramtweets

suaramvideo

insta_suaram

Design & illustration
**Amin Landak**